## குவைத்தில் சட்ட விரோதமாக தங்கியிருப்பவர்களுக்கான பொது மன்னிப்பு

குவைத்தினுள் பிரவேசித்த பின் எவ்வகையிலும் வதிவிட வீசா பெற்றுக்கொள்ளாத , பெற்றுக்கொண்ட வதிவிட வீசாக்களை புதுப்பித்துக்கொள்ளாத இரு பிரிவினர்களுக்கும் பொது மன்னிப்பு காலமாக 29.01.2018 தொடக்கம் 22.02.2018 வரையான காலப்பகுதி குவைத்தின் உள்விவகார அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது .

பொதுமன்னிப்பு காலத்திற்குள் வதிவிட வீசா இல்லாதவர்கள் மற்றும் வீசாவினைப் புதுப்பித்துக் கொள்ளாதவர்கள் எந்தவிதமான தண்டப்பணம் செலுத்தலுக்கோ அல்லது வேறேதும் தண்டனைகளுக்கோ உட்படுத்தப்படாது குவைத் நாட்டை விட்டு வெளியேற அனுமதிக்கப்படுவர்.

மேற்குறித்த இரு பிரிவினரும் தொடர்ந்து இந்நாட்டிலே தங்கியிருக்க விரும்பினால் தண்டப்பணம் மற்றும் புதிதாக வதிவிட வீசாவுக்கான கட்டணங்களைச் செலுத்தி வீசாவினை புதுப்பித்துக்கொள்ளலாம் .

பொது மன்னிப்பு காலத்தினுள் வெளியேறுபவர்கள் மீண்டும் குவைத் நாட்டிற்குள் பிரவேசிப்பதற்கு அனுமதிக்கப்படுவர்.

பொதுமன்னிப்பு காலத்துக்குள் சுயமாக முன்வந்து மேற்சொன்ன நடவடிக்கைகள் எடுக்கத் தவறுபவர்கள் கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்படுவதுடன் அத்தைகயோர் மீண்டும் குவைத் நாட்டிற்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

உடற் தகுதியீனம் மற்றும் குற்றச்செயல்கள் காரணமாக பயணத்தடையுடன் வெளியேறுபவர்களும் குவைத் நாட்டிற்குள் மீண்டும் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

மேற்குறிப்பிட்ட இரு பிரிவினர் தவிர்ந்த வேறு ஏதும் சட்ட ரீதியான பிரச்சினை உள்ளவர்கள் அண்மையில் உள்ள குடிவரவு குடியகல்வு திணைக்களத்திற்குச் சென்று தமது பிரச்சனைகளை தீர்த்துக்கொள்ள இப் பொதுமன்னிப்பு காலத்தினுள் அனுமதிக்கப்படுகின்றனர்.

தற்போது ஏறத்தாழ 15,447 இலங்கையர்கள் வதிவிட வீசா இன்றி குவைத் நாட்டில் வசித்து வருவதாக குவைத் குடிவரவு குடியகல்வு திணைக்களம் அறிவித்துள்ளது. எனவே தமது உறவினர்கள் எவரேனும் குவைத் நாட்டில் வதிவிட வீசா தொடர்பான இன்னல்களுக்குட்பட்டு இலங்கைக்கு திரும்ப முடியாத நிலையில் இருந்தால் இவ்வாறான பொதுமன்னிப்பு காலத்தை பயன்படுத்தி நாட்டிலிருந்து வெளியேறுமாறு அறிவுறுத்தும் படி குவைத்தில் உள்ள இலங்கை தூதுவராலயம் கேட்டுக் கொள்கிறது.

**இலங்கைத் தூதுவராலயம் – குவைத்**

*2018.01.24*